**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.213/2021**
**in connected with**
**அசல் வழக்கு எண்.198/2019**

DW1 – வெங்கடேசன், த/பெ.கிருஷ்ணமூர்த்தி
நாள் –14.03.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>

25.09.2023–ம் தேதியிட்ட புல எண்.178 மற்றும் புல எண்.77–க்கான வில்லங்கசான்றின் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** 25.09.2023–ம் தேதியிட்ட புல எண்.497, 43, 69, 88, 78, 77 மற்றும் புல எண்.66–க்கான வில்லங்கசான்றின் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** 23.02.2012–ம் தேதியிட்ட 1–ம் பிரதிவாதி ராமலிங்கத்திற்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 26.08.2016–ம் தேதியிட்ட மனோகரன் என்பவருக்கு வாதிகள் மற்றும் 1–ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 22.11.2021–ம் தேதியிட்ட மைனர் மணிகண்டன், அம்பேத்கர், சுகுமாறன், சம்பத்ராஜ் ஆகியோர்களுக்கு வாதிகள் மற்றும் 1–ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு இரண்டு வழக்குகளையும் செலவுத்தொகையுடன் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.